செ.வெ.எண்:- 370 நாள் 26.06.12

## பத்திரிகை செய்தி

வணிகர்கள் தங்களது மாதாந்திர நமூனாக்களை வணிகவரித்துறையின் www.tnvat.gov.in என்ற வலைதளம் மூலம் மின்னணு முறையில் தாக்கல் செய்யும் வசதி நடைமுறையில் உள்ளது. மேலும் மாதாந்திர நமூனாக்கள் தாக்கல் செய்ய தகுதியுடைய அனைத்து வணிகர்களும் மின்னணு முறையில் தங்களது நமூனாக்களை தாக்கல் செய்ய வேண்டியது கட்டாயமாக்கப்பட்டது. தற்போது மாநிலத்தில் சுமார் 80 சதவிகித வணிகர்கள் தங்களது மாதாந்திர நமூனாக்களை மின்னணு முறையில் தாக்கல் செய்து வருகிறார்கள். மாநிலத்தில் 100 சதவிகித மின் ஆளுமையை நடைமுறைப்படுத்துவதே அரசின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளை அடையும் பொருட்டு ஜூலை 2012 மாதம் முதல் (ஜூன் 2012 நமூனாக்கள்) மின்னணு முறையில் தாக்கல் செய்யாமல், வணிகவரித்துறை வரிவிதிப்பு அலுவலகங்களில் நேரடியாக சமர்ப்பிக்கப்படும் மாதாந்திர நமூனாக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எனவே, மாதாந்திர நமூனாக்களை தாக்கல் செய்யும் அனைத்து வணிகர்களும் தங்களது நமூனாக்களை மின்னணு முறையில் மட்டுமே தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மின்னணு முறை பற்றி அதிகம் அறிந்திராத வணிகர்களுக்கு உதவுவதற்காக, ஒவ்வொரு வரிவிதிப்பு அலுவலகத்திலும் உதவி மேசை (Help Desk) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9